மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்

அ.வ.எண். 1/2023

பெயர் – பொன்ராஜ் (வா.சா.1)

நாள் – 25.09.2023

4, 5 பிரதிவாதிகள் தரப்பில் செய்யப்பட்ட கு.வி.

எனது தகப்பனார் பெயர் உத்தண்ட தேவர் என்றால் சரியல்ல. குருசாமி தேவர் ஆகும். எனது தகப்பனாரை சின்னகுருசாமி என்று சொல்வார்களா என்றால் குருசாமி என்று தான் சொல்வார்கள். உத்தண்ட தேவர் எனக்கு என்ன உறவு என்றால் எனது தகப்பனாரை பெற்ற தாத்தா ஆவார். உத்தண்ட தேவரின் மனைவி பெயர் குருவம்மாள் என்றால் சரிதான். அவர்களுக்கு மாரியம்மாள் என்ற மகள் உண்டு என்றால் மாரியம்மாள், பெரியகுருசாமி, குருசாமி, மாரியப்பன் என்ற பிள்ளைகள் உண்டு. அதில் மாரியம்மாளுக்கு திருமணம் ஆகி மகாலட்சுமி, மாரியம்மாள், சுகுமாரி என்ற பிள்ளைகள் உள்ளார்கள் என்றால் சரிதான். எனது தகப்பனாருடன் பிறந்த மாரியப்பனுக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் இரண்டு பெண்கள் உண்டு. மாரியப்பன் தற்போது உயிருடன் இல்லை. மாரியப்பனின் மனைவியும் உயிருடன் இல்லை. மாரியப்பனின் இரண்டு பெண் பிள்ளைகளான பிச்சை மற்றும் முத்து ஆகியோர்கள் திருமணம் ஆகி கோவில்பட்டியில் உள்ளார்கள். பெரியகுருசாமிக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் பொன்னுதாய், அன்னபூர்ணம், மற்றும் பொன்ராஜ் ஆகிய மூன்று பிள்ளைகள் உண்டு. எனது தாயார் பெயர் முத்துலட்சுமி என்றால் சரிதான். என்னுடன் பிறந்தவர்கள் எத்தனை பேர்கள் என்றால் நானும், எனது தம்பி உத்தண்டராஜ்ம் ஆவோம். எனது பாட்டி குருவம்மாளுக்கு நான்கு வீடுகள் மற்றும் 10,15 ஏக்கர்கள் புஞ்சை நிலங்கள் உண்டா என்றால் புஞ்சை நிலங்கள் பற்றி தெரியாது. நான்கு வீடுகள் உண்டு. தபசில் சொத்துக்கள் உத்தண்டதேவருக்கு பாத்தியப்பட்டதா அல்லது அவரது மனைவி குருவம்மாளுக்கு பாத்தியப்பட்டதா என்றால் அந்த நான்கு வீடுகளும் குருவம்மாளுக்கு பாத்தியப்பட்டது ஆகும். அந்த நான்கு வீடுகளையும் தபசில் சொத்துக்களாக காண்பித்துள்ளேனா என்றால் காண்பித்துள்ளேன். குருவம்மாளுக்கு பாத்தியப்பட்ட அனைத்து நிலங்களையும் இந்த வழக்கில் தபசில் சொத்தாக காண்பித்துள்ளேனா என்றால் இல்லை. இந்த வழக்கில் தபசில் சொத்தாக பூர்வீக சொத்தாக காண்பிக்காத காரணத்தினால் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. உத்தண்ட

தேவரின் வாரிசு அனைவரையும் இந்த வழக்கில் கட்சியாக சேர்த்துள்ளேனா என்றால் இல்லை. உத்தண்ட தேவரின் வாரிசு அனைவரும் அவசிய தரப்பினர்கள் என்பதால் அவர்கள் அனைவரையும் இந்த வழக்கில் சேர்க்காத காரணத்தினாலும் இந்த வழக்கு அவசிய கட்சியினரை கட்சி சேர்க்காத அவசிய தரப்பினாராக கட்சி சேர்க்காத தோஷத்திற்கு ஆட்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இதே தபசில் சொத்தை பொறுத்து இதே நீதிமன்றத்தில் அ.வ.எண்.100/2007 நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அதில் இந்த வழக்கில் உள்ள பிரதிவாதிகளாக ஆர.செல்லதுரை, ஆர்.முருகன், டி.ராஜேந்திரன், ஆர்.சுகுமாரி, ஜி.உத்தண்டராஜ் ஆகியோர்களை சேர்த்துள்ளேன் என்றால் சரிதான். அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த தள்ளுபடி தீர்ப்பாணையை எதிர்த்து மேல்முறையீடு செய்யவில்லை என்றால் எனக்கு விபத்து ஏற்பட்டதால் மேல்முறையீடு செய்யவில்லை. அ.வ.எண்.100/2007 தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை என் வசம் உள்ளது என்றால் சரியல்ல. அ.வ.எண்.100/2007 தபசில் சொத்தில் எனக்கு பங்கு பாத்தியம் கிடையாது என்று தீர்ப்பாகி உள்ளது என்றால் அதுபற்றி தெரியாது. அ.வ.எண்.100/2007 தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அ.வ.எண்.100/2007 மற்றும் இந்த வழக்கில் உள்ள தபசில் சொத்துக்கள் உள்ள தரப்பினர்கள் ஒன்றேதான் என்றால் சரிதான். இந்த வழக்கில் கங்கேஸ்வரி, சார்பதிவாளர், மாவட்ட பதிவாளர் ஆகியோர்களை தரப்பினராக சேர்த்துள்ளேன் என்றால் சரிதான். மற்ற பிரதிவாதிகளை அ.வ.எண்.100/2007 தரப்பினராக சேர்த்துள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கான முன்தீர்ப்பு தடை தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அ.வ.எண்.100/2007 ல் உள்ள தீர்ப்பாணையை எதிர்த்து மேல்முறையீடுதான் செய்யமுடியும் என்றாலும் இந்த வழக்கை தாக்கல் செய்யமுடியாது என்றாலும் சரியல்ல. தபசில் சொத்தானது எனது என்னுடன் பிறந்த அக்காவான மாரியம்மாளுக்கு ஒதுக்கப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. மாரியம்மாளின் சொத்தை பொறுத்து மாரியம்மாள் யாருக்காவது ஏதாவது ஏற்பாடு ஆவணம் ஏற்படுத்தி கொடுத்துள்ளாரா என்றால் இல்லை. மாரியம்மாள் தனக்கு பாத்தியப்பட்ட தபசில் சொத்தில் உள்ள சொத்தை தனது மகள்களான சுகுமாரி மற்றும் அவரது கணவர் ராஜேந்திரன் ஆகியோர்களுக்கு ஒரு பதிவு செய்த கிரைய ஆவணம் பிறப்பித்து

கொடுத்துள்ளார் என்றால் தபசில் சொத்து முத்துலட்சுமிக்கு என்பவருக்கு பாத்திய ப்பட்டது. ஆனால் மாரியம்மாள் தனக்கு பாத்தியப்பட்ட ஆவணமாக பொய்யாக ஆவணம் பிறப்பித்து கொடுத்துள்ளார். தபசில் சொத்து முத்துலட்சுமிக்கு பாத்தியப்பட்டதாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் முத்துலட்சுமிக்கு தபசில் சொத்து எப்போதும் பாத்தியப்பட்டது கிடையாது என்றாலும் சரியல்ல. தபசில் சொத்து முத்துலட்சுமிக்கு பாத்தியப்பட்டதாக கிரைய ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த கிரைய பத்திரத்தை தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். நான் சொல்வதுபோல் தபசில் சொத்து முத்துலட்சுமிக்கு பாத்தியப்பட்டதாக எந்த கிரைய ஆவணமும் இல்லை என்றாலும் நான் வழக்கிற்காக அவ்வாறு கிரையம் ஆவணம் இருப்பதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மாரியம்மாள் 12.3.1993ம் தேதி தனது மகள் மற்றும் மருமகன் ஆகியோர்களுக்கு எழுதிக்கொடுத்த கிரையபத்திரம் போலியானது என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அந்த ஆவணம் போலியானது. அந்த கிரையம் போலியானது என்று இந்த வழக்கில் எந்த பரிகாரமும் கோரவில்லை என்றால் சரிதான். 12.3.1993ம் தேதியிட்ட கிரைய ஆவணம் வழக்கு சொத்தை பொறுத்து எங்களை கட்டுப்படுத்தாது என்று எந்தபாரிகாரும் கோரவில்லை என்றால் சரிதான். அந்த கிரைய பத்திரம் உண்மையானது என்பதால் அவ்வாறான பரிகாரம் எதையும் நான் கோரவில்லை என்றால் சரியல்ல. தபசில் சொத்தில் வடபகுதியில் 4.12.2002ம் தேதி அன்று மாரியம்மாளின் மகளான மகாலட்சுமி, மாரியம்மாள் மற்றும் சுகுமாரி, உத்தண்டராஜ் ஆகியோர்கள் ஒரு பதிவு செய்த கிரையப த்திரத்தை முருகன் மற்றும் செல்லத்துரை என்பவர்களுக்கு கிரைய பத்திரமூலமாக எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. அந்த பத்திரத்தை பொறுத்தும் அது போலியானது என்றோ தபசில் சொத்தை பொறுத்து எங்களை கட்டுப்படுத்தாது என்று பரிகாரம் கோரவில்லை என்றால் சரிதான். அந்த கிரைய பத்திரம் உண்மையானது என்பதால் அவ்வாறான பரிகாரம் எதையும் நான் கோரவில்லை என்றால் சரியல்ல. அந்த தபசில் சொத்துக்கு கிழக்கு புறத்தில் ராமையாதேவர், மற்றும் காலி இடம் என்று நான்கு மாலில் காண்பித்துள்ளேன் என்றால் சரிதான். ஆனால் தற்போது அந்த இடத்தில் வீடுகள் கட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த வீடுகள் கந்தையாதேவருக்கு பாத்தியப்பட்டது ஆகும். தபசில்

சொத்துக்கு கிழக்கு புறத்தில் கந்தையாதேவரின் வீடுகள் உள்ளதாக காண்பிக்கவில்லை என்றாலும் காலி இடமாகத்தான் காண்பித்துள்ளேன் என்றாலும் சரிதான் அந்த வீடுகள் வழக்கிற்கு பின்னிட்டு கட்டிய வீடுகள் ஆகும். நான் சொல்வது போல் தபசில் சொத்துக்கு கிழக்கு புறத்தில் ஏற்கனே வீடுகள் இருந்தது என்றாலும் காலிஇடம் என்று நான் மாலாக காண்பித்துள்ளது தவறானது என்றால் சரியல்ல. தபசில் சொத்து பிரதிவாதிகளான முருகன், கங்கேஸ்வரி , ராஜேந்திரன் மற்றும் செல்லதுரை ஆகியோருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. தபசில் சொத்தில் பிரதிவாதி முருகன் மற்றும் செல்லதுரை ஆகியோர்கள் புதிதாக வீடு கட்டியுள்ளார்கள் என்றால் சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்த பிறகு கட்டினார்கள். அவர்கள் 2007 ம் ஆண்டுக்கு முன்பாகவே தபசில் சொத்தில் வீடு கட்டி அனுபவித்துவருகிறார்கள் என்றால் சரியல்ல. தபசில் சொத்துக்கு வடக்கு புறத்தில் முருகன் கடைவைத்து நடத்தி வருகிறார் என்றால் சரிதான். எனவே தபசில் சொத்தை பொறுத்து எனக்கு எந்தவித உரிமையோ பாத்தியமோ கிடையாது என்றாலும் எனது வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றாலும் சரியல்ல.